மழை நீரை சேகரிப்பீர் !! மண் வளம் பெறுவீர் !!

# திண்டுக்கல் மாநகராட்சி

2022 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் தேதி (20.05.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 12.15 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள சிறப்பு கூட்ட பொருள்

## கொடுஞ்செயல், எதிர்ப்பு நாள் உறுதி மொழி

அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய, இந்திய மக்களாகிய நாம் எவ்வகையான கொடுஞ் செயல்களையும், வன்முறைகளையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என உறுதி கூறுகிறோம். எல்லா மக்களிடத்தும் அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றை போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஊறு விளைவிக்கும் பிரிவினை சக்திகளை எதிர்த்து போராடவும் நாம் உறுதி கூறுகிறோம்.

---

## திருக்குறள்

**ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல**
**தூதிய மில்லை உயிர்க்கு**

## பொருள்

வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும், அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

**1)** பொது சொத்து வரி சீராய்வு குறித்து கடந்த 11.04.2022 அன்று மாமன்ற தீர்மான எண்7-ன் படி வரி உயர்வு செய்யப்படும் விபரங்கள் பொது மக்கள் ஆலோசனைக்கும், ஆட்சேபனை குறித்தும் பத்திரிக்கை வாயிலாக விளம்புகை செய்யப்பட்டது. அதற்கு தயார் செய்யப்பட்ட முழு விபரங்கள் அடங்கிய படிவங்கள் வரி விதிப்புதாரரர்களுக்கு வழங்கப்பட்டு தற்போது வரை 9840 படிவங்கள் பொது மக்கள் பூர்த்தி செய்து ஒப்பமிட்டு வழங்கியுள்ளார்கள்.

பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சியினர் தற்போதைய சில தெருக்களை வரி விதிப்பு மண்டல நிலைப்பாட்டினை குறைத்து கீழ்நிலை மண்டலமாக சில தெருக்களை மாற்ற கோரியுள்ளனர். தற்போதய சொத்து வரி சீராய்வு நடவடிக்கைகளில் வரி விதிப்பு மண்டலங்களை மேல் நிலை மண்டலமாக மாற்ற மட்டுமே வழிவகை உள்ளது. எனவே உரிய வழிவகை செய்யப்படும் போது மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்யலாம்.

திண்டுக்கல் மாநகராட்சியில் 600 ச. அடிக்கு குறைவாக உள்ள குடியிருப்புகளின் வரிவிதிப்புகளின் மொத்தம் எண்ணிக்கை 24012 ஆகும். மொத்த வரிவிதிப்புகள் 45966 ஆகும். மொத்த வரி விதிப்புகளில் 52% 600 ச.அடிக்கு குறைவான குடியிருப்புகளாக உள்ளது. பொது சொத்து வரி சீராய்வில் 600 சதுர அடிக்கு குறைவான கட்டிடங்களுக்கு தற்போதய வரியில் 25% உயர்வு மட்டுமே உயர்த்தப்பட உள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டிடங்கள் (Residential Building) :**

| **பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கானகாரணி** |
|---|---|
| <=600 | 1.25 |
| 601 – 1200 | 1.5 |
| 1201 – 1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் (Non - Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டிடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1. 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2. 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுவடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4. 1800 சதுரடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5. வணிக நிறுவனங்களுக்கு / வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6. தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>சொத்துவரி அடிப்படை மதிப்பு</u>**

சொத்து வரி சீராய்வில் 1800 சதுர அடிக்கு மேலுள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% உயர்வு செய்யப்படும் போது புதிய கட்டிடங்களுக்கான சொத்துவரி பழைய கட்டிடங்களுக்கு குறையாத வகையில் 100% அடிப்படை மதிப்பினை உயர்வு செய்யலாம்.

காலிமனை வரியின் மண்டல மதிப்பீடு சொத்து வரி மண்டலத்தின் மாற்று நிலைப்படி (சொத்து வரி **A** = காலிமனை வரி **C**, **B** = **B** **C** = **A**) காலிமனை வரி விதிப்பிற்கான இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது நடைமுறையிலுள்ள காலிமனை வரி சதுர அடி **1**க்கு **A –** மண்டலம் **- 0.20** பைசா**, B –** மண்டலம் **– 0.30** பைசா**, C –** மண்டலம் **– 0.40** பைசா என உள்ளதை அடிப்படை மதிப்பு **100 %** உயர்வு செய்து **A –** மண்டலத்திற்கு **– 0.40** பைசா**, B –** மண்டலத்திற்கு **– 0.60** பைசா மற்றும் **C –** மண்டலத்திற்கு **– 0.80** பைசா என்ற விகித உயர்வினை நிதி ஆதாரம் மற்றும் அத்தியாவசிய பணிகள் காரணங்களுக்காக உறுதி செய்யலாம்.

(**ந**.**க**.**எண்**.2665/2022/**அ**1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

01.04.2022 **முதல்** பொது சொத்துவரி சீராய்வினை உறுதி செய்யலாம்.

**இடம் :** திண்டுக்கல்
**நாள் :** 18.05.2022

**மேயர்**
**திண்டுக்கல் மாநகராட்சி**